DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

**OS.No : 136/2020 DW : 4**

Name : வெண்ணிலா Age -

Father's Name Village

Taluk Caste

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 09.11.2022

**முதல் விசாரணை**

நான் திருத்தணி வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சொல்ல எனக்கு அழைப்பானை வந்தது. (சாட்சியின் அழைப்பானை சரிபார்க்கப்பட்டது). பழையனூர் கிராம சர்வே எணகள் 185/8, 185/8ஏ, 185/9 சம்பந்தப்பட்ட அ பதிவேட்டு நகல் மற்றும் 10(1) கணக்கு மற்றும் அடங்கல் பதிவேட்டின் நகல் நில அமைப்பு புலப்பட நகல் ஆகியவற்றை கொண்டுவந்திருக்கிறேன். அது சா.சா.ஆ.1. சர்வேஎண் 185/8ல் 1 ஏர்-ஐ 1998ல் வருடம் இணைப்பு பாதை அமைப்பதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 185/8 உட்பிரிவு செய்யப்பட்டது சர்வேஎண் 185/8ஏ பாதைக்காக மாற்றப்பட்டது. சர்வேஎண் 185/8ஏ பாதை என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளது. எங்கள் அலுவலகம் தான் இடத்தை கையகப்படுத்தியது. அதற்கான ஆவணங்களை கொண்டு வரவில்லை. கையகப்படுத்தியதற்கான குறிப்புகள் நான் கொண்டு வந்த ஆவணங்களில் இருக்கிறது.

**குறுக்கு விசாரணை...**

எங்கள் ஆவணங்களில் சர்வேஎண் 185/7 ரயத்துவாரி புஞ்சை என்று வகைபடுத்தப்பட்டு துரைக்கண்ணு மற்றும் இருவர் பெயரில் இருக்கிறது. எங்களுக்கும் பத்திர பதிவு அலுவலகத்திற்கும் சரியான இணைப்பு இல்லை என்றும் ஆகவே சர்வேஎண் 185/7க்குரிய ஆவணங்களை வாதிகள் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. சர்வேஎண் 185/8க்கு துரைக்கண்ணு, பட்டுசாமி, கருப்பு நாயக்கர் பெயரில் வருவாய் துறை பதிவுகள் இருந்தது. நிலத்தை கையகப்படுத்துவதற்கு முன்னர் யாருக்கு அறிவிப்பு கொடுத்தோம் என்று கேட்டால் அதற்கான ஆவணத்தை கொண்டுவரவில்லை. வாதிக்கு 2½ சென்ட் மட்டுமே இடம் போனது என்றும் வாதிகள் தான் மனமுவந்து அதில் பாதை போட அனுமதித்தார்கள் என்றால் சரியல்ல. ஆகவே தான் அவர்கள் நஷ்டஈட்டை வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 185/8, 185/8ஏ, 185/9 சர்வே எண் 185/7 துரைக்கண்ணு, கருப்பு நாயக்கர், பட்டு சாமி ஆகியோர் பெயரில் வருவாய் துறையில் இருக்கிறது. அது வாதிகள் பெயரில் மட்டுமே பதிவு இருந்திருக்க வேண்டும் என்று பிரதிவாதிகள் ஆவணங்களை தயார் செய்து கொண்டார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எப்படி சொத்தை பிரித்துக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை அது வாங்கப்பட்ட காலத்திலிருந்து 3 பேர் பெயரில் இருக்கிறது என்றும் அதை எப்படி பிரித்துக் கொண்டார்கள் என்று கேட்டால் தெரியாது.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.